*கவனிக்க.- 28.04.2017 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2018 - 2017 මැයි මස 05 වැනි සිකුරාදා - 2017.05.05

*2018 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு மே மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (அ) - மாகாணசபை

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 780 |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆதன விற்பனைகள் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - | | |
| பதவிகள் - வெற்றிடம் | - | | |


**கவனிக்க.-** பெனசோமா பிரன்ட்சிப் பௌன்டேசன் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2017, ஏப்பிறல் மாதம் 28 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2017, மே மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, மே மாதம் 12 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## மத்திய மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் பிரிவு- 03 சேவை மட்டத்தில் விளையாட்டு உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2017

மத்திய மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் விளையாட்டு உத்தியோகத்தர் பதவியில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக, மத்திய மாகாணத்தில் வசிக்கும் தகைமையுடைய ஆண், பெண் இருசாராரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **பொதுத் தகைமைகள் :**

1.1 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

1.2 விண்ணப்பம் கோரப்படும் கடைசித் திகதிக்கு (2017.05.30) உடன் முந்திய 03 வருடங்கள் தொடர்ச்சியாக மத்திய மாகாணத்தினுள் நிரந்தர வதிவுடையவரென உறுதிப்படுத்தல் வேண்டும்.

1.3 சிறந்த நன்னடத்தை மற்றும் தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

1.4 ஏதேனுமொரு சமயமொன்றின் துறவியாக உள்ள எந்தவொரு நபரும் இப்பதவிக்கு விண்ணப்பிக்க தகைமையற்றவராவார்.

1.5 தற்போது அரச/மாகாண அரச சேவையில் நிரந்தரமாக்கப்பட்டவர் எனின், விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு திருப்திகரமான சேவையைக் கொண்டுள்ளார் என நிறுவனத் தலைவரின் சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.

1.6 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று (2017.05.15) 18 வயதுக்கு குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

2. **கல்வித் தகைமைகள் :**

சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் அத்துடன் வேறு ஏதேனும் இரண்டு பாடங்களுக்குத் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

3. **தொழில்சார் தகைமைகள் :**

3.1 தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தினால் நடாத்தப்படும் ஒரு வருடத்திற்கு குறையாத விளையாட்டுத்துறை டிப்ளோமா பாடநெறியினைக் கற்று அதில் சித்தி பெற்றிருத்தல்.

*அத்துடன்*

3.2 இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச போட்டிகளில் (ஆசிய விளையாட்டுப் போட்டி, ஆசிய மெய்வல்லுநர் போட்டி, பொதுநலவாய விளையாட்டுக்கள், உலக மெய்வல்லுநர் போட்டிகள் அல்லது ஒலிம்பிக்) முதலாம், இரண்டாம் அல்லது மூன்றாம் இடத்தைப் பெற்றிருத்தல்.

*அல்லது*

3.3 விளையாட்டுத்துறை அமைச்சினால் நடாத்தப்படும் தேசிய விளையாட்டு விழாவில் ஏதாவது ஒரு போட்டியில் தேசிய மட்டத்தில் முதலாம், இரண்டாம் அல்லது மூன்றாம் இடத்தைப் பெற்றிருத்தல்.

*அல்லது*

3.4 தேசிய விளையாட்டு விழாவின் 3 ஆவது கட்டமான மாகாண மட்ட மாவட்டங்களுக்கிடையிலான தனிப்பிரிவுப் போட்டிகளில் முதலாம், இரண்டாம் அல்லது மூன்றாம் இடத்தைப் பெற்றிருத்தல்.

*அல்லது*

3.5 தேசிய விளையாட்டு விழாவின் 3 ஆவது கட்டமான மாகாண மட்ட மாவட்டங்களுக்கிடையிலான குழுப்போட்டிகளில் முதலாம், இரண்டாம் அல்லது மூன்றாம் இடத்தைப் பெற்றிருத்தல்.

*அல்லது*

3.6 தேசிய விளையாட்டு விழாவின் 2 ஆவது கட்டமான மாவட்ட மட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கிடையிலான தனிப்பிரிவுப்

போட்டிகளில் முதலாம், இரண்டாம் அல்லது மூன்றாம் இடத்தைப் பெற்றிருத்தல்.

அல்லது

3.7 தேசிய விளையாட்டு விழாவின் 2 ஆவது கட்டமான மாவட்ட மட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கிடையிலான குழுப்போட்டிகளில் முதலாம், இரண்டாம் அல்லது மூன்றாம் இடத்தைப் பெற்றிருத்தல்.

அல்லது

3.8 தேசிய விளையாட்டு சம்மேளனத்தினால் ஆண்டுதோறும் நடாத்தப்படும் தேசிய மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகளில் முதலாம், இரண்டாம் அல்லது மூன்றாம் இடத்தைப் பெற்றிருத்தல்.

**4. உடற்றகைமைகள்:**

அனைத்து விண்ணப்பதாரிகளும் நாட்டின் எப்பகுதியிலும் பணி புரிவதற்கும், பதவியின் பணிகளை மேற்கொள்வதற்கும் உகந்த உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். உடலியல் ரீதியான தகைமையினை பரீட்சிப்பதற்காக மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால், தேசிய விளையாட்டு நிறுவனத்தினால் அல்லது விளையாட்டு வைத்தியப் பிரிவினால் நடாத்தப்படும் உடற்றகைமை பரீட்சையில் தாக்க வேகம், உடல் வளையும் தன்மை, வயிற்றின் தாக்க வேகமும் வளையும் தன்மையும், வயிற்றின் வலிமை, இரு கைகளின் வலிமை, சுறுசுறுப்பு, நின்று பாய்தல், வேகம், தாங்கிக்கொள்ளும் ஆற்றல் போன்ற உடற்றகைமைகள் பரீட்சிக்கப்படும். (உடல் மற்றும் உள குறைபாடுகளற்றவராக இருத்தல் வேண்டும்).

அனைத்து கல்வி மற்றும் தொழிற் தகைமைகளை 2017.05.15 ஆந் திகதிக்கு பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**5. சம்பளம் :**

5.1 சம்பளம் வழங்கல் மற்றும் ஏனைய விடயங்கள் என்பன பொது நிருவாக சுற்று நிருபம் 03/2016 இன் ஏற்புகளுக்கமைய மேற்கொள்ளப்படும்.

5.2 சம்பள் அளவுத்திட்டம் :
ரூபா. 29,840-10x300-11x350-10x560-10x660-ரூபா 48,890 ஆகும். (MT 1-2006 சம்பளத் தொகுதிக்கமைய)

**6. ஆட்சேர்ப்பு நிபந்தனைகள் :**

மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள விளையாட்டு உத்தியோகத்தர் பதவிக்குரிய ஆட்சேர்ப்பு திட்டத்திற்கமைய ஆட்சேர்ப்பு நிபந்தனைகள் தீர்மானிக்கப்படும்.

**7. ஆட்சேர்ப்பு முறை :**

7.1 அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அனைத்து விண்ணப்பதாரிகளும் திறந்த எழுத்துப் பரீட்சை ஒன்றிற்கு உட்படுத்தி, அதில் சித்தியடைந்தவர்கள் அனைவரும் முறையான நேர்முகப் பரீட்சைக்கு உள்வாங்கப்படுவர். எழுத்துப் பரீட்சை மற்றும் நேர்முகப்பரீட்சையில் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளின் திறமை அடிப்படையில் முன்னுரிமை பட்டியல் தயாரிக்கப்படும். காணப்படும் வெற்றிடங்களுக்கு சம எண்ணிக்கையான விண்ணப்பதாரர்கள் புள்ளிகளின் திறமை ஒழுங்கு வரிசையில் தெரிவு செய்யப்பட்டு உடற்றகைமையினைப் பரீட்சிப்பதற்கான பிரயோகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். பிரயோகப் பரீட்சையில் சித்தியடைந்தோர் மாத்திரம் நியமனம் வழங்கும் பொருட்டு தெரிவு செய்யப்படுவர். பிரயோகப் பரீட்சையில் சித்தியடையாதவர்களின் இடத்திற்கு, திறமை ஒழுங்கு வரிசையில் அடுத்துள்ள விண்ணப்பதாரர் என்ற வகையில் தெரிவு செய்யப்பட்டு பிரயோகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு அதில் சித்தியடைந்தோர் நியமனத்திற்காக தெரிவு செய்யப்படுவர்.

7.2 ஆட்சேர்ப்பிற்காக முன்னுரிமை வழங்கப்படும் விளையாட்டுத் துறைகள்

1. வுசூ (Wushu)
2. பட்மின்டன்
3. டைகொண்டோ
4. குத்துச் சண்டை
5. கெரம்
6. கராட்டி
7. சதுரங்கம் (Chess)
8. கூடைப்பந்து
9. டிரையத்லன் (Triathlon)
10. ஜிம்நாஸ்டிக்
11. சைக்கில் ஓட்டம்
12. ரகர்
13. பாரம் தூக்குதல்
14. மல்யுத்தம் (Wrestling)
15. மெய்வல்லுநர் விளையாட்டுக்கள்
16. கயிறுஇழுத்தல்
17. உடற்பயிற்சி (Body Building)
18. கரையோரக் கபடி
19. கைப்பந்து (Hand Ball)
20. கரையோரக் கரப்பந்து

**8. சேவை நிபந்தனைகள் :**

8.1 இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியம் உரித்துடையதுமாகும்.

8.2 அரசகரும மொழிக்கொள்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக வெளியிடப்பட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 01/2014 மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய சுற்றறிக்கைகளின் ஏற்புகளுக்கு கட்டுப்படுதல் வேண்டும்.

8.3 இந்நியமனப் பதவியில் குறைந்தது 05 வருடங்கள் கட்டாயமாக மத்திய மாகாணத்தினுள் சேவையாற்ற வேண்டுவதுடன், அக்காலப்பகுதியில் வேறு மாகாணங்களுக்கு இடமாற்றம் பெற்றுக்கொள்வதற்கோ அல்லது வேறு பதவிகளுக்கு விடுவிக்கக்கோரியோ மேற்கொள்ளும் எத்தகைய வேண்டுகோள்களும் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

**9. விண்ணப்பிக்கும் முறை :**

9.1 அனைத்து விண்ணப்பதாரர்களும் பரீட்சைக் கட்டணமான 600 ரூபாவினை மத்திய மாகாண சபை பிரதம செயலாளரின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இல் வரவுவைக்கும் பொருட்டு மத்திய மாகாணத்திலுள்ள யாதேனும் ஒரு பிரதேச செயலாளர் காரியாலயத்தில் பணமாக செலுத்தி பெறப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டிவிட வேண்டும். பற்றுச்சீட்டின்றி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன், செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணங்கள் எக்காரணம் கொண்டும் மீள் செலுத்தப்படமாட்டாது.

9.2 இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கேற்ப தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்படும் விண்ணப்பங்கள் "செயலாளர், மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு, இல 244, கடுகஸ்தோட்டை வீதி, கண்டி" என்ற முகவரிக்கு 2017.05.30 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் "மத்திய மாகாண அரச சேவையின் விளையாட்டு உத்தியோகத்தர் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்தல் - 2017" எனக் குறிப்பிடல் வேண்டும். அத்துடன் பதிவு மாவட்டத்தையும் குறிப்பிடல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும், முழுமையுறாத மற்றும் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்திராத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். தபாலில் தொலைந்த விண்ணப்பங்கள் சம்பந்தமாக இவ்வாணைக்குழு பொறுப்புக் கூற மாட்டாது.

**10. பரீட்சை ஊடகம் :**

இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். தாம் பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலத்தின் சரியான எழுத்தினைத் தெளிவாக விண்ணப்பத்தில் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பிக்கும் மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

**11. பரீட்சை நிலையம் :**

பரீட்சை நிலையங்கள் அமையும் இடம் பற்றி மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் பரீட்சை அனுமதிப்பத்திரத்தின் மூலம் விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்படும்.

**12. பரீட்சை செயற்திட்டம் :**

i. ***உளச்சார்பு*** :- (ஒரு மணித்தியாலம்) (100 புள்ளிகள்)

இவ்வினாப்பத்திரம் விண்ணப்பதாரரின் கருத்துக்களை வெளியிடுதல், கிரகித்தல் எழுத்துக்களின் பிரயோகம், எளிய இலக்கணப் பயன்பாடு மொழியும் கட்டுரையும், கொடுக்கப்பட்ட கடிதம் ஒன்றிற்கான பருப்படியைத் தயாரித்தல், கொடுக்கப்பட்ட தரவுகளுக்கு ஏற்ப வரைபுகளையும் அட்டவணைகளையும் தயாரித்தல், கொடுக்கப்பட்ட பந்தியைச் சுருக்கி எழுதுதல், கொடுக்கப்பட்ட பல்வாக்கியங்களின் கருத்துக்களை தனி வாக்கியத்தில் எழுதுதல், தர்க்கரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல், முரண்பாட்டுக்கான தீர்வு, தீர்மானம் எடுக்கும் ஆற்றல் என்பன தொடர்பான அறிவினைப் பரீட்சிப்பதற்கான விடயம் சார்ந்த வினாக்களைக் கொண்டிருக்கும்.

ii. ***பொது அறிவு*** :- (ஒரு மணித்தியாலம்) (100 புள்ளிகள்)

இவ்வினாத்தாள் இலங்கையின் வரலாறு, புவியியல், சமூக மற்றும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த தகவல்கள், உள்நாட்டு வெளிநாட்டு விளையாட்டுத் துறைசார் தகவல்கள் உள்ளடக்கிய வினாக்களைக் கொண்டதாகும்.

**13. விண்ணப்பங்கள் நிரப்பியனுப்புவதற்கான அறிவுறுத்தல்கள் :**

இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கமைய ஏ4 அளவு தாளின் இரு பக்கங்களையும் பாவித்து அதன் முதலாவது பக்கத்தில் இல. 1-5 வரையான விடயங்களையும் மிகுதி மற்றைய பக்கங்களில் உள்ளடக்கியதாக விண்ணப்பப்படிவங்கள் தயாரிக்கப்பட வேண்டும் விண்ணப்பத்தை தட்டச்சு செய்து தெளிவான கையெழுத்தினால் நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் பூரணப்படுத்தும்போது கீழ் குறிப்பிட்டுள்ள குறியீட்டு எண்களை பொருத்தமான கூடுகளில் இட வேண்டும்.

13.1 விண்ணப்பிக்கும் மாவட்டங்கள் என குறிப்பிட வேண்டியது விண்ணப்பதாரரின் நிரந்தர வதிவிட மாவட்டமாகும் மாவட்டங்களின் குறியீட்டு இலக்கங்கள் பின்வருமாறு;

கண்டி - 01

மாத்தளை - 02

நுவரெலியா - 03

13.2 விண்ணப்பிக்கும் விளையாட்டுத் துறைக்கான இலக்கத்தினை இவ்வறிவித்தலின் இல. 7.2 இல் குறிப்பிட்டுள்ள குறியீட்டு இலக்கத்தின் அடிப்படையில் குறிப்பிடுக.

13.3 விண்ணப்பப் படிவத்திலுள்ள விண்ணப்பதாரரின் கையொப்பமானது அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு அல்லது 240,360 ரூபாவிற்கு கூடிய ஆண்டுச் சம்பளத்தை பெறும் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் பதவிநிலை அலுவலரொருவரினால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.

13.4 நியமனம் வழங்க முன், வழங்கிய பின் அல்லது யாதேனும் ஓர் சந்தர்ப்பத்தில் யாதாயினும் விண்ணப்பதாரர் இப்பதவிக்கு தகுதியற்றவரென உறுதி செய்யப்படும் பட்சத்தில் அவரது பரீட்சார்த்தத்தன்மை அல்லது நியமனம் இரத்துச் செய்யப்படும். மேலும், விண்ணப்பதாரர் ஒருவர் அறிந்த உண்மைக்கு மாறானதொரு தகவலை சமர்ப்பித்திருப்பதாக அவர் நியமனம் செய்யப்பட்டதன் பின் உறுதிசெய்யப்படும் பட்சத்தில் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கம் செய்யப்படுவார்.

13.5 தற்போது அரச சேவையில் / மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களைத் திணைக்களத் தலைவரினூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

14. இப்பரீட்சையை நடத்துதல், நடத்திய பின் தெரிவு செய்தல், தெரிவு செய்யாதிருத்தல், வெற்றிடங்களின் எண்ணிக்கை பற்றிய விளக்கமளித்தல், அவ்வறிவித்தலில் வெளியாகாத வேறு விடயங்கள் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் என்பன மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுவிற்குரியதாகும்.

ஆர். எம். என். ரத்நாயக்க,
செயலாளர்,
மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு,
மத்திய மாகாணம்.

மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு,
இல. 244, கடுகஸ்தோட்டை வீதி,
கண்டி,
2017, ஏப்பிறல் 6.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மத்திய மாகாண சபையின் விளையாட்டுத் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பப் பிரிவு-03 சேவை மட்டத்தின் விளையாட்டு உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல்-2017**

பரீட்சை இலக்கம் : ☐
(அலுவலக உபயோகத்திற்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் : ☐ (சிங்களம் - S, தமிழ் - T, ஆங்கிலம் - E)
(உரிய குறியீட்டை கூட்டினுள் இடவும்)

விண்ணப்பிக்கும் விளையாட்டு ☐

வதிவிட மாவட்டம் ☐ மாவட்டத்திற்குறிய குறியீட்டு இல :- ☐

01. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் : ..............................................................................................................
(Mr./Mrs./Miss) (ஆங்கில பெரிய எழுத்தில்)

1.2 முதலெழுத்துக்களுடன் பெயர் : ..............................................................................................................
(சிங்களத்தில்/ தமிழில்)

1.3 முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் :
..........................................................................................................................
(ஆங்கில பெரிய எழுத்தில்)

1.4 முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் :
..........................................................................................................................
(சிங்களத்தில்/தமிழில்)

02. 2.1 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :
..........................................................................................................................................

2.2 அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :
..............................................................................

2.3 அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) :
..............................................................

2.4 தற்போது அரச சேவையில் இருப்பவராயின் அலுவலக முகவரி :
.....................................................................................

2.5 தொலைபேசி இலக்கம் : ............................................................

03. 3.1 பிறந்த திகதி : ...............................................................

3.2 விண்ணப்பம் கோரப்படும் கடைசித் திகதிக்கு (2017.05.30)வயது :
வருடங்கள் : .................................. மாதங்கள் : .................................... நாட்கள் : ...............................

3.3 தேசிய ஆளடையாள அட்டை இல :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

04. பால் (ஆண், பெண்) : ..........................................

05. 5.1 நிரந்தர வதிவிட மாவட்டம் :

| வாக்காளர் இடாப்பு பட்டியலின் அடிப்படையில் | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|
| தேர்தல் மாவட்டம் | | | |
| தேர்தல் தொகுதி | | | |
| வாக்கெடுப்புப்பிரிவு | | | |
| கிராம அலுவலர் பிரிவு இல. | | | |
| வீட்டு இல. | | | |
| பெயருக்கு முன்னாலுள்ள தொடரிலக்கம் | | | |

06. கல்வித் தகைமைகள் :-

6.1 க.பொ.த.(சா.த.) பரீட்சையின் விபரங்கள் :
பரீட்சை ஆண்டு : .................. சுட்டிலக்கம் : .....................

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

07. தொழில்சார் தகைமைகள் :-

7.1 விளையாட்டு டிப்ளோமா

| நிறுவனம் | பூர்த்தி செய்துள்ள டிப்ளோமா பாடநெறி | கால வரையறை | பெற்றுள்ள சித்திகள் | சான்றிதழ் திகதியும் இலக்கமும் |
|---|---|---|---|---|
| | | | | |

7.2 விளையாட்டில் பெற்றுள்ள சாதனைகள் (இவ்வறிவித்தலின் இல. 3.2 இலிருந்து 3.8 வரையில் குறிப்பிட்டுள்ள வெற்றிகள்)

7.2.1 ..........................................................................................................
7.2.2 ..........................................................................................................
7.2.3 ..........................................................................................................
7.2.4 ..........................................................................................................
7.2.5 ..........................................................................................................
7.2.6 ..........................................................................................................
7.2.7 ..........................................................................................................
7.2.8 ..........................................................................................................
7.2.9 ..........................................................................................................
7.2.10 ..........................................................................................................

08. ஏனைய தகைமைகள் :- ....................................................

09. பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் விபரம் :

(i) பணம் செலுத்திய பிரதேச செயலகம் : ...............................................

(ii) திகதி : ...............................................

(iii) பற்றுச்சீட்டின் இலக்கம் : ...............................................

பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கே ஒட்டவும்

**பரீட்சார்த்தியின் உறுதியுரை**

இவ்விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானவை எனவும் சரியானவையெனவும், இதில் உள்ளடக்கப்பட்ட ஏதாவது விபரங்கள் பிழையாக காணப்படுமிடத்து நியமனத்திற்கு முன்னர் நான் தகுதியற்றவனாவேன் என்றும் நியமனத்திற்கு பின்னர் கண்டுபிடிக்கப்படுமிடத்து சேவையில் இருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவேன் என்றும் நான் அறிவேன்.

..................................................................

திகதி : ........................... பரீட்சார்த்தியின் கையொப்பம்.

**பரீட்சார்த்தியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல்**

இந்த விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ........................................................... என்பவர் தனிப்பட்ட முறையில் எனக்குத் தெரிந்தவர் எனவும் அவர் இன்று என் முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டார் எனவும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

.............................................

திகதி : ........................... அத்தாட்சிப்படுத்தியவரின் கையொப்பம்.

அத்தாட்சிப்படுத்திய உத்தியோகத்தரின் முழுப்பெயர் : ......................................................
பதவி : .................................................
முகவரி : .............................................
(உத்தியோக முத்திரையால் உறுதிப்படுத்தல் வேண்டும்.)

10. அரசாங்க அல்லது மாகாண அரச சேவையில் தற்போது சேவையிலிருக்கும் விண்ணப்பதாரிகள் சம்பந்தமாக பின்வரும் சான்றிதழைத் திணைக்களத் தலைவர் வழங்க வேண்டும்.

இவ்விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி .................................. என்பவர் இத்திணைக்களத்தில்/நிறுவனத்தில் ......................... ஆக கடமையாற்றுகிறார். கடந்த 5 வருட காலப்பகுதியில் அவர் எந்த விதமான ஒழுக்காற்று தண்டனைகளுக்கும் (எச்சரிக்கை தவிர்ந்த) ஆளாகவில்லை என்பதை தெரிவிப்பதுடன் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படின் அவரை தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும் என்றும் ஒப்புதல் அளிக்கின்றேன்.

.............................................
திணைக்களம்/நிறுவனத் தலைவரின் கையொப்பம்
(உத்தியோகப்பூர்வ முத்திரை)

திகதி : ...........................

5-07

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2014 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே காசுக் கட்டளைகளுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரைப் பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2014 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III ஆவது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I ஆவது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III ஆவது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V ஆவது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI ஆவது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவது தொகுதி | 40.00 | 60.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III ஆவது தொகுதி | 15.00 | 60.00 |
| I ஆவது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| III ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V ஆவது பகுதி | 123.00 | 60.00 |
| VI ஆவது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை - 2017**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| மே | .. | வெள்ளி | 05.05.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.04.2017 |
| | | வெள்ளி | 12.05.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.04.2017 |
| | | வெள்ளி | 19.05.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.05.2017 |
| | | வெள்ளி | 26.05.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.05.2017 |
| யூன் | .. | வெள்ளி | 02.06.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.05.2017 |
| | | வெள்ளி | 09.06.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.05.2017 |
| | | வெள்ளி | 16.06.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.06.2017 |
| | | வெள்ளி | 23.06.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.06.2017 |
| | | வெள்ளி | 30.06.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.06.2017 |
| யூலை | .. | வெள்ளி | 07.07.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.06.2017 |
| | | வெள்ளி | 14.07.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.06.2017 |
| | | வெள்ளி | 21.07.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.07.2017 |
| | | வெள்ளி | 28.07.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.07.2017 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2017 ஆம் ஆண்டு சனவரி 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.